# ஐந்து அரங்குகளில் தேர்வை எதிர்கொள்வோம்!



SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

சௌ-என்-லாய்

■
அயல்மொழிப் பதிப்பகம், பீகிங் - வெளியிட்டுள்ள
செள என்-லாய் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகளிலிருந்து
மொழியாக்கம் செய்யப்பட்ட இரு கட்டுரைகள்

■
முதற்பதிப்பு:
ஜனவரி, 2001

■
அச்சு:
எழில் பிரிண்ட்ஸ்,
சென்னை - 600 024.

■
கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை,
சென்னை - 600 002.
☎. 841 2367

■
விலை:
ரூ. 4.00

SEE
SIGNATURE

# ஐந்து அரங்குகளில் தேர்வை எதிர்கொள்வோம்!

மே 29, 1963

நமது முன்னணி ஊழியர்கள் ஐந்து அரங்குகளில் தேர்வை எதிர் கொள்ள வேண்டியிருப்பதன் அவசியம் பற்றி நான் பேச விரும்புகிறேன். அவை : சித்தாந்தம், அரசியல், சமூக உறவு கள், குடும்ப உறவுகள், அன்றாட வாழ்வு ஆகியனவாகும்.

முதலாவதாக, நாம் சித்தாந்த அரங்கில் தேர்வை எதிர்கொள்ள வேண்டும். நாம் அடிக்கடி குறிப்பிடுகிறபடி, நமது சிந்தனையை மறு வார்ப்பு செய்வதும் உலகைப் பற்றியும் வாழ்வைப் பற்றியும் சரியான கண்ணோட்டத்தைப் பெறுவதுமே இதற்குத் தேவையாகும். இதன் பொருள் மார்க்சிய-லெனினியக் கண்ணோட்டத்தை அல்லது இயக்கவியல் - வரலாற்றியல் பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தைப் பெறுவதேயாகும். இந்த நோக்கத்திற்காக, தோழர் மா சே துங்கின் "நடைமுறை பற்றி", "முரண்பாடு பற்றி" ஆகிய விளக்கமான கட்டு ரைகளிலும் அறிவு பற்றிய அவரது அண்மைக்கால குறிப்புகளிலும்[1] உள்ள தத்ததுவார்த்த அடிப்படைக் கோட்பாடுகளை நாம் கற்றுணர் வதும் எப்படிச் செயல்படுத்துவது என்பதை அறிந்து கொள்வதும் அவசியமாகும். இது வாழ்நாள் முழுவதற்குமான பெருமுயற்சி யாகும். காலம் எப்போதுமே முன்னோக்கிச் செல்கிறது என்பதை நாமறிவோம். காலத்துக்குப் பின்னே தேங்கி நின்றுவிடாமல் நமது சிந்தனையை காலத்தோடு ஒட்டி முன்னேற்றுவதே சிந்தாந்த மறு வார்ப்பின் நமது நோக்கமாகும். காலங்கள் வளர்ச்சியை ஒருபோதும் நிறுத்துவதில்லை என்பதனால், நமது சிந்தனையை மறுவார்ப்பு செய்வதையும் நாம் நிறுத்திவிட முடியாது. இன்றிலிருந்து இன்னும் பத்தாயிரம் ஆண்டுகள் கடந்து போனாலும், முன்னேறியதற்கும் பின் தங்கியதற்கும், பழமைக்கும் புதுமைக்கும், தனிமனிதனுக்கும் கூட்டுத்துவ சமூக விருப்பத்துக்கும் இடையிலான முரண்பாடுகள் மக்கள் மனதில் தொடர்ந்து பிரதிபலிக்கவே செய்யும். எனவே அப்போதும் கூட சித்தாந்த மறுவார்ப்பு செய்து கொள்வது அவசிய மாகவே இருக்கும். இந்தப் பணிக்கு இறுதி முடிவு ஏற்பட குறிப்பிட்ட

ஆண்டு அல்லது குறிப்பிட்ட தேதியை இப்போதே நாம் எப்படி தீர்மானிக்க முடியும்? இது முற்று முழுதாக சாத்தியமேயில்லை. சித்தாந்த மறுவார்ப்பில் போதிய கவனம் செலுத்தாமல் போனால், அதன் விளைவாக புரட்சிகர ஊக்கம் குறைந்தால், புரட்சியில் பல்லாண்டுகளுக்கு முன்பே இணைந்து பணியாற்றிய தோழர்கள் கூட தமது தகுதிப் படிநிலையில் பின்னுக்குத் தள்ளப்படும் நிலை ஏற்படும். எனவே சித்தாந்த மறுவார்ப்பு செய்து கொள்வதை இடையறாத முயற்சியுடன் கூடிய பற்றுறுதி மிக்க நீண்டகாலக் கடமையாக நாம் மேற்கொள்ள வேண்டும். இந்தக் கொள்கையானது நமது கண்ணோட்டத்தை விரிவுபடுத்த உதவும். இன்னும் பத்தாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் சித்தாந்த அரங்கில் முரண்பாடுகள் நீடிக்கவே செய்யும் என்கிற நிலையில், அப்போதும் மக்கள் தமது சிந்தனையை மறுவார்ப்பு செய்து கொள்ள வேண்டியது அவசியம் என்கிற நிலையில், இந்தப் பணியானது ஏற்கனவே நிறைவடைந்து விட்டதாகவும் அதில் திருப்தியடைந்துள்ளதாகவும் நாம் எப்படி கருத முடியும்? முடியாது, நாம் ஒருபோதும் திருப்தியடையக் கூடாது.

சித்தாந்த அரங்கில் நம்மை உரமேற்றிக் கொள்ள, நமது சொந்த வர்க்க மூலத்தைப் பற்றி கவனத்தில் கொள்வதும், நம்மைச் சுற்றியுள்ள மக்களிடையே நிலவும் வர்க்க உறவுகளையும் நாம் கையாளுகிற பிரச்சினைகளில் பொதிந்துள்ள வர்க்க உறவுகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் ஒரு நல்ல குடும்பப் பின்னணியிலிருந்து வந்திருக்கிறீர்கள் என்றும், நடைமுறை வேலைகளில் களங்கமற்றவர் என்றும், புரட்சியில் சில ஆண்டுகளுக்கு முன்பு சேர்ந்துள்ளவர் என்றும் வைத்துக் கொள்வோம். உதாரணமாக, உங்களுக்கு ஹாங்காங்கில் பணி ஒதுக்கப்பட்டிருந்தால், அங்கு நிலவும் குறிப்பான சமூக சூழ்நிலைமைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு நீங்கள் இன்னமும் கவனமாக ஆராய வேண்டும். ஹாங்காங்கில் ஒதுக்கப்படும் பணிக்குப் பதிலாக, பெய்ஜிங்கில் அரசு தந்திர துறையிலோ, அந்நிய நாடுகளுடனான வர்த்தகத் துறையிலோ ஒருவேளை நீங்கள் பணியாற்ற நேரிடலாம். அது அந்நியர்களுடனும் வர்த்தகர்களுடனும் அடிக்கடி தொடர்புகளும் சந்திப்புகளும் கொண்டதாக இருக்கும். அப்போது நீங்கள் சந்திக்கின்ற மக்களையும் பிரச்சினைகளையும் பற்றி ஆராய்வது உங்களுக்கு அவசியமாகும். நாம் இப்போது முதலாளித்துவ நாடுகளுடன் நல்ல பயனுள்ள முறையில் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகிறோம். அந்நாடுகளிடமிருந்து முழு இயந்திரச் சாதனங்களை இறக்குமதி செய்யும் திட்டங்களும்

உள்ளன. இப்பணிக்குப் பொறுப்பேற்றுள்ள தோழர்களில் சிலருக்கு அந்நிய வர்த்தகர்களோடு அடிக்கடி தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும். இத்தகைய உறவுகளை ஆழமாகப் பகுத்தாராய வேண்டியது இத்தோழர்களுக்கு மிகவும் அவசியமாகும். இது எனக்கும் பொருந்தும். ஏனெனில் நானும் வெளிநாட்டவரோடு அடிக்கடி தொடர்பு கொண்டுள்ள பணியில் ஈடுபட்டுள்ளேன். எவ்வாறாயினும், பல்வேறு வர்க்கங்களுக்கிடையிலான உறவுகளில் நாம் ஆழமாகக் கவனம் செலுத்த வேண்டும்.

எனது சொந்த அனுபவத்தையே இங்கே நான் சித்தரிக்க விரும்பு கிறேன். நான் ஒரு நிலப்பிரபுத்துவ குடும்பத்தில் பிறந்தேன். முதலா ளித்துவக் கல்வியைத்தான் நான் பெற்றேன். இருப்பினும், சித்தாந்த மறுவார்ப்பின் மூலம் என்னை ஒரு புரட்சிகர அறிவுஜீவியாக மாற்றிக் கொண்டுள்ளேன். கடந்த காலத்தில் ஐக்கிய முன்னணி தொடர்பான கட்சி வேலைகளை நான் மேற்கொண்டேன். அதன் காரணமாக, சியாங்கே ஷேக்கையும் அமெரிக்காவின் ஜெனரல் மார்ஷலையும்[2] பல சந்தர்ப்பங்களில் சந்தித்துப் பேச நேரிட்டது. எனது பள்ளிக்கூட சகாக்களும் நண்பர்கள் பலரும் கோமிண்டாங் கட்சி உறுப்பினர்களாவர். இப்போது அவர்கள் தைவானில் வசிக்கிறார்கள். எனது பல நண்பர்கள் அமெரிக்காவில் வசிக்கிறார்கள். எனவே எனது சமூக உறவுகள் மிகவும் சிக்கலானவை. அவை கட்சி சார்ந்தவர்கள், கட்சி சாராதவர்கள், வெளிநாட்டினர் என பல தரப்பட்ட மக்களை உள்ளடக்கியுள்ளன. மேலும் நான் பல்வகைப்பட்ட நடவடிக்கை களில் அடிக்கடி பங்கேற்க வேண்டியுள்ளது. சில நேரங்களில் நான் வெளிநாடுகளுக்குக் கூட பயணம் மேற்கொள்கிறேன். இத்தகைய பயணங்களில் வழக்கமாக நான் முதலாளித்துவ நாடுகளின் அரசுத் தலைவர்களைச் சந்தித்துப் பேச வேண்டியுள்ளது. எனது சமூகத் தொடர்புகளின் சிக்கலான தன்மையானது, நான் தெளிவான உணர்வோடும் எச்சரிக்கையோடும் இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது. எனக்கு இப்போது 65 வயதாகிறது. ஆனால் நான் என்னுடைய சிந்தனையை மறுவார்ப்பு செய்து கொள்ள அவசிய மில்லாத அளவுக்கு, சித்தாந்த ரீதியாக எஃகுறுதி பெற்றுவிட்ட தாகக் கூறிக் கொள்ள முடியுமா? நான் அவ்வாறு கூறத் துணிய மாட்டேன். தோழர் லியாவோ லுயான்,[3] "நம்மை விடுங்கள்; தலைமை அமைச்சரான சௌ என் லாயே சித்தாந்த மறுவார்ப்பு செய்து கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது என்று கூறுகிறாரே!" என்று

நான் சொன்னதை நினைவு கூர்ந்து ஒருமுறை குறிப்பிட்டார். அது ஒரு நன்னோக்கமுடைய குறிப்பு; நான் அதைப் பெரிதும் பாராட்டினேன். நான் அடிக்கடி என்னைச் சித்தாந்த ரீதியாக மறுவார்ப்பு செய்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுவது உண்மையே. அப்பெரு முயற்சியை நான் இன்னமும் தொடர்ந்து வருகிறேன். இதில் நான் முன்னோடியாக விளங்கவே விரும்புகிறேன்.

சித்தாந்த ரீதியில் புத்தாக்கம் செய்து கொள்வதன் முக்கியத்துவத்தை நாம் எல்லாரும் உணர்ந்திருக்கிறோம் என்றே நம்புகிறேன். எல்லா வகையான சமூக உறவுகளும் இன்னும் பலவும் ஒருவரது சித்தாந்தத்தின் மீது செல்வாக்கு செலுத்தி தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை நாம் எச்சரிக்கையுடன் உணர வேண்டும். எனவே நாம் அடிக்கடி நம்மைப் பரிசீலனை செய்து கொண்டு நம்முடைய தோழர்களுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும். வழக்கமான குளியலைப் போலவே, "சித்தாந்தக் குளியலை"யும் நாம் ஒழுங்காகவும் முறையாகவும் மேற்கொள்ள வேண்டும். சித்தாந்த மறுவார்ப்பைக் காற்றுக்கு இணையாக - காற்று இல்லாவிடில் நமது உயிர் வாழ்வே இல்லை என்பதால், இன்றியமையாததாகக் கருத வேண்டும். இல்லையேல் நமது சிந்தனை துருப்பிடித்து வீணாகிப் போவதையே நாம் காண்போம். ஒவ்வொரு கட்சி உறுப்பினரும், கட்சியில் சேர்ந்த நாளிலிருந்து தனது வாழ்நாள் முடியும் வரை தன்னை சித்தாந்த மறுவார்ப்பு செய்து கொள்ள மனத்தளவில் தயாராக இருக்க வேண்டும். கட்சியில் இன்னும் சேராத போதிலும், புரட்சியில் துணிந்து இறங்கி சோசலிச நிர்மாணத்திலும் சோசலிசக் கட்டுமானத்திலும் பணிபுரிந்து வரும் நமது நண்பர்களுக்கும் இது பொருந்தும்.

இரண்டாவதாக, நாம் அரசியல் அரங்கில் தேர்வை எதிர்கொள்ள வேண்டும். இது தொடர்பாக மிக முக்கியானது என்னவெனில், நமது அரசியல் நிலைப்பாட்டை வழுவாமல் பற்றி நிற்பதாகும். புரட்சி அணியில் சேர்ந்து விட்டதாலேயே நம்முடைய சரியான அரசியல் நிலைப்பாட்டில் நாம் உறுதியாக நிற்பவர்கள் என்று கருதிக் கொள்ள முடியாது. அரசியல் நிலைப்பாடு என்பது மிகச் சாரமான கருத்துருவாகும். புரட்சிகர நிலைப்பாட்டை நீங்கள் நெறி பிறழாமல் பற்றி நிற்கிறீர்களா என்பதை, உண்மையான போராட்டத்தில் உங்கள் செயல்பாடு எப்படி இருக்கிறது என்பதைப்

பொருத்தே மதிப்பிட முடியும். ஒரு போராட்டத்தில் நீங்கள் உறுதியாக நின்றிருப்பீர்கள்; மற்றொன்றில் அவ்வாறு இருந்திருக்க மாட்டீர்கள். எனவே அரசியல் நிலைப்பாட்டில் ஒருவரது உறுதி அல்லது ஊசலாட்டத்தைப் பற்றி நீண்ட காலப் போராட்டங்களின் ஊடாகத் தான் மதிப்பிட முடியும். ஒருவரது அரசியல் உறுதியை மதிப்பிட, வேலையைப் பற்றிய அவரது மனப்பான்மை, கட்சிக் கொள்கைகளைப் புரிந்து கொள்வதும் நடைமுறைப் படுத்துவதும், மக்களுடனான அவரது உறவு, கட்சிப் பற்றை அவர் கண்கூடாக வெளிப்படுத்தும் விதம் ஆகியவற்றையும் நாம் பரிசீலிக்க வேண்டியது அவசியமாகும். கட்சியில் இன்னும் சேராதவர்களைப் பொருத்தவரை, அவர்கள் பாட்டாளி வர்க்கத்தை மிக முன்னேறிய வர்க்கமாகக் கருதுகிறார்களா, அதன் சித்தாந்தத்தைத் தங்களின் வழிகாட்டியாக ஏற்கிறார்களா என்பதை வைத்தே தீர்மானிக்க முடியும். குறிப்பான முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயம் என்னவெனில் நமது கவனத்துக்கு வரும்போதே தவறுகளைத் திருத்துவதிலும், விமர்சனம் - சுய விமர்சனத்தைப் பின்பற்றுவதிலும் நாம் எந்த அளவுக்குத் தயாராக இருக்கிறோம் என்பதேயாகும்.

நான் இதுவரை கூறியதிலிருந்து அரசியல் அரங்கில் சோதனைகளுக்கு முன் உறுதியாக நிற்பது அவ்வளவு எளிதானதல்ல என்பது தெளிவாகும். ஒருவர் புரட்சியில் நீண்ட காலத்துக்கு முன்பே சேர்ந்தவர், பல போர்க் களங்களில் பங்கேற்று போரிட்டவர், பாராட்டத்தக்க பல வீரச் செயல்களில் ஈடுபட்டவர் என்பதாலேயே அவர் அரசியல் நிலைப்பாட்டில் உறுதிமிக்கவர் என்று நாம் கணித்துவிட முடியாது. அப்படி எந்த உத்தரவாதமும் தரவும் முடியாது. இல்லையெனில் சென் டூ ஷியு,[4] வாங்மிங்,[5] காவோ காங்[6] ஆகியோர் தமது புரட்சிகர நிலையிலிருந்து வழுவி தோல்வியடைந்ததை நாம் எப்படி விளக்க முடியும்? உண்மையில் சென் டூ ஷியுவின் சிந்தனைக்கும் மார்க்சிய - லெனினியத்துக்கும் எந்த உறவுமில்லை. அவர் மார்க்சிய - லெனினியத்தை வழிகாட்டும் தத்துவக் கோட்பாடாக எப்போதுமே ஏற்றுக் கொண்டரல்ல என்பதைக் கூறவும் தேவையில்லை. வாங் மிங்கைப் பொருத்தவரை அவர் தனது தவறுகளை இன்னமும் ஒப்புக் கொள்ளவே மறுக்கிறார். எனவே, அரசியல் அரங்கில் சோதனைகளின் ஊடாக புரட்சிகர நிலைப்பாட்டை உறுதியாகப் பற்றி நிற்க, நம்மால் இயன்றதனைத்தையும் செய்ய நாம் எப்போதுமே முயல வேண்டும்.

மூன்றாவதாக, பழைய சமூகத்தின் தீய தாக்கங்களை எதிர்த்து நின்று ஈடுகொடுக்க வேண்டும். நாம் எப்போதுமே சித்தாந்த மற்றும் அரசியல் அரங்குகளில் உறுதியாக நிற்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வந்துள்ளோம். நாம் இன்னும் இதர மூன்று அரங்குகளில் தேர்ச்சி அடைய வேண்டியிருப்பதன் அவசியத்தை இன்று உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏனெனில் நாம் பரம்பரையாக உருவாகி வளர்ந்து வந்த சீன சமுதாயமானது மிகவும் சிக்கலானது. அதை மாற்றியமைக்கும் கடமையில் நாம் போராடி வருகிறோம். இன்றைய சமுதாயத்திலும் கூட நேற்றைய பழமைப் பழக்க வழக்கங்களின் தாக்கம் நீடிக்கவே செய்கிறது. நமது சிந்தனையை எளிதில் நச்சுப்படுத்தும் நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ பழக்க வழக்கங்களின் தாக்கம் தொடர்ந்து நீடிக்கவே செய்கிறது. உங்கள் விழிப்புணர்வை நீங்கள் தளர்த்தும் வேளையில், உங்கள் மனத்தை மாசுபடுத்தும் வாய்ப்பை பழமைப் பழக்க வழக்கங்கள் அடைந்து விடுகின்றன. பழைய சமூகத்தை மாற்றியமைப்பது என்பது நமக்கு, குறிப்பாக தலைமைப் பொறுப்புகளில் உள்ள தோழர்களுக்கு மிகக் கடினமான பணி என்பதை இதிலிருந்து உணர முடியும். பழமைப் பழக்க வழக்கங்களின் தாக்கம் ஒரே நாளில் மறைந்து விடாது. அதற்கு நீண்டகாலம் பிடிக்கும். பழமைப் போக்கை மாற்றியமைப்பதை ஒரே அடியில் சாதித்து விட முடியும் என்று நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்?

இப்பழமைவாத தீய பழக்கவழக்கங்கள் சமுதாயத்தின் எல்லாத் துறைகளிலும் நமது அமைப்புகள், அரசு நிறுவனங்கள், அலுவலகங்களிலும் ஊடுருவி விடுகின்றன. உதாரணமாக, பெய்ஜிங் நகரத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். அந்நகரில் நீங்கள் எங்கு சென்றாலும் காலத்துக்கு ஒவ்வாத பழமைவாதப் போக்குகளையும் பழக்க வழக்கங்களையும் நீங்கள் எளிதில் இனங்காண முடியும். இந்நகரின் பழமைச் சமூகத்தை மட்டும் புதிதாக மாற்றியமைக்க பல பத்தாண்டுகள் பிடிக்கும். இக்கூட்டத்தில் பங்கேற்கும் 60 வயதுக்கு மேற்பட்ட தோழர்கள், இந்நகரம் இறுதியாக புதிய மாற்றமடைவதைக் காணும் வாய்ப்பு இல்லாமல் போய்விடக் கூடும் என்று அஞ்சுகிறேன். இதிலிருந்து பழைய சமுதாயத்தின் தீய தாக்கங்களிலிருந்து தற்காத்துக் கொள்வது எளிதானதல்ல என்பதை நாம் அறிய முடியும். பழைய சமுதாயத்தை மாற்றியமைக்கும் போராட்டதில் பங்கேற்பதன் மூலம் மட்டுமே நாம் நமது சிந்தனையை மறுவார்ப்பு செய்து

கொள்ள முடியும். இல்லையென்றால், பழைய சமுதாயத்தின் தாக்கங்களுக்கு நாம் ஆட்படுகிறோமா அல்லது நமது போராட்டங் களுக்கு பழைய சமுதாயம் ஆட்படுகிறதா என்பதைக் கூறுவது சிரமமானதாகவே இருக்கும். "நியான் விளக்குகளின் கீழே காவலர்கள்" என்ற நாடகத்தில், "நாம் முதாலாளித்துவத்தை மாற்றி யமைக்கப் போகிறோமா? அல்லது அது நம்மை மாற்றியமைக்கப் போகிறதா?" என்று ஒரு உரையாடல் வரும். அது ஒரு பொருள் நிறைந்த கேள்வி. உண்மையில், நீங்கள் பழைய சமுதாயத்தை மாற்றியமைக்க முற்படும்போது, அதற்குப் பதிலாக அது உங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்த மாற்றமானது நீண்ட காலத்திற்கு தொடரக்கூடிய, மீண்டும் மீண்டும் நடக்கும் போராட்டமாகும். நீங்கள் ஒருபுறமும் பழைய சமுதாயம் மறுபுறமும் நின்று மாறி மாறி தாக்கங்களை ஏற்படுத்தும் நிகழ்ச்சிப் போக்குகளைக் கொண்ட தாகும். குறிப்பிட்ட ஓரிடத்தின் சமூகச் சூழலில் நீங்கள் சோதனை களில் வெற்றி பெற்றிருந்தாலும், நீங்கள் புதிய பகுதிக்கு பணி நிமித்தமாக மாற்றப்பட்டால் அங்குள்ள பழைய சமூக பழக்க வழக்கங்கள், பழமை மரபுகளுக்கு எதிராக நீங்கள் இன்னமும் தொடர்ந்து போராட வேண்டிய அவசியம் ஏற்படும். இங்கே உள் நாட்டில் நிலவும் சாதகமான சூழலில் நீங்கள் உறுதியாக நின்றிருக்க லாம்; ஆனால் ஹாங்காங்கிலோ, வெளிநாட்டிலோ நீங்கள் பணியாற்ற வேண்டியிருந்தால் அது வேறானது. எனவே பழைய சமூகத்தின் தீய தாக்கங்களை எதிர்த்து நிற்க மன உறுதியும் நீண்ட காலப் போராட்டத்துக்குத் தயாராக இருப்பதும் நமக்கு அவசியமாகும்.

நான்காவதாக, நாம் நம்முடைய உறவினர்களைச் சரியாகக் கையாள வேண்டும். இது நம்முடைய நெருங்கிய உறவினர்களுக்கு மட்டுமின்றி, தூரத்து உறவினர்களுக்கும் பொருந்தும். உறவினர் களை நீங்கள் மாற்றப் போகிறீர்களா, அல்லது அவர்கள் உங்களை மாற்றப் போகிறார்களா? தலைமைப் பொறுப்பில் இருக்கும் ஒரு ஊழியர் பதில் சொல்ல வேண்டிய முதற்கேள்வி இது. இது நீங்கள் சரியாகக் கையாள வேண்டிய விஷயமும் கூட; அவ்வாறில்லை யேல் உங்கள் உறவினர்களின் கருத்துக்களுக்கு நீங்கள் சாய்ந்தாட வேண்டிய வாய்ப்புகள் ஏற்படுமே தவிர, அவர்களை நீங்கள் மாற்று வதற்கான வாய்ப்புகளே இல்லை. நம்முடைய உறவினர்கள் பற்றிய பிரச்சினையைக் கையாள்வதற்கு நாம் சமுதாயத்தின் உதவியைச்

சார்ந்திருப்பதே மிகச் சிறந்த வழியாகும். மக்கள் திரள் மத்தியில் சென்று அவர்கள் மனப்பக்குவம் பெறவும் மறுவார்ப்பு செய்து கொள்ளவும் நாம் உதவ வேண்டும். மக்களை மாற்றியமைக்கும் செயலில், புதிய சமுதாயத்தின் ஆற்றல் மீது நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். நமது உறவினர்களைச் சரியாகக் கையாள வேண்டும் என்று சொல்வது எளிது; ஆனால் செயலில் அது கடினமானது. உங்களுக்குப் பல உறவினர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக, ஒரே கூரையின் கீழ் எப்போதும் உங்களுடன் வாழும் உங்கள் குழந்தைகளும் உண்டு. இந்நிலையில், குழந்தைகளைப் பெற்றோர் மாற்றியமைக்க வேண்டுமா? அல்லது குழந்தைகளால் பெற்றோர் மாற வேண்டுமா? என்ற கேள்வி எழுகிறது. இங்கே, தலைமைப் பொறுப்பிலுள்ள நம்முடைய அனைத்து ஊழியர்களையும் குறிப்பாக இந்தக் கூட்டத்தில் பங்கேற்கும் 407 தோழர்களையும் கேட்டு கொள்கிறேன். நான் உட்பட, நாம் அனைவரும் இதில் முன்னுதாரணமாகத் திகழ வேண்டும் என விரும்புகிறேன். நமது குழந்தைகள் வீணாகிப் போகாமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு மேலாதிக்க பிரபுவைப் போல குழந்தைகளிடம் நடந்து கொள்ளாதிருக்க கவனம் செலுத்தும் அதே வேளையில், அவர்களுக்கு அதீத செல்லங்கொடுத்து வீணாகிப் போகாமல் இருக்கவும் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். அப்படியில்லையென்றால் நம்பிக்கையூட்டும் ஒரு இளந்தலைமுறையை உருவாக்குவதில் அடைகிற தோல்வியை நாம் எப்படி நியாயப்படுத்த முடியும்?

நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ சமூகங்களிலிருந்து வேறுபட்டதான சோசலிச சமுதாயம் நம்முடையது. இருப்பினும் பழமைச் சமூக வரலாற்றிலிருந்து பயனுள்ள படிப்பினைகளை நாம் பெற முடியும். கியூயின் வம்ச முதற்பேரரசன் கியூயின் ஷிஹுவாங் (கி.மு. 221-207) சீனாவை ஒன்றிணைப்பதில் வெற்றி கண்டான். ஆனால் அவன் தன் மகனுக்கு செல்லங்கொடுத்து சீரழித்தான். இதனால் அவனது மகனாகிய இரண்டாம் கியூயின் ஆட்சியில் அப்பேரரசு சிதைந்து நொறுங்கியது. நமது குழந்தைகள் அரசுக்கும் சமூகத்துக்கும் சுமையாக மாறவோ, நமது புரட்சிகர இலட்சியத்துக்குத் தடையாகி நிற்கவோ நாம் அனுமதிக்கக் கூடாது. நம்முடைய தலைமை ஊழியர்கள் தங்கள் குழந்தைகள் மீது கண்டிப்புடன் இருப்பது நல்லது. அது அவர்களது முன்னேற்றத்துக்கு மிகவும் தேவையான தூண்டுகோலாக இருக்கும்.

ஐந்தாவதாக, நாம் நமது தேர்வை அன்றாட வாழ்வில் எதிர்கொள்ள வேண்டும். இது அன்றாட வாழ்வின் பொருளாதாய, சித்தாந்த அம்சங்கள் இரண்டையும் உள்ளடக்கியதாகும். பொருளாதார விடயங்களைப் பொருத்தவரையில், தலைமைப் பொறுப்பிலுள்ள ஊழியர்களாகிய நாம் எப்போதும், என்ன உடமையாகக் கொண்டிருக்கிறோமோ அதில் திருப்தியுடனும் அல்லது மிகவும் திருப்தியுடனும் எளிய வாழ்வை மேற்கொள்ள வேண்டும். நமது நியாயமான தேவைகளுக்கு மேல் அதிகமாக சலுகைகளைப் பெறும் போது, அதைக் கண்டு மலைப்படைந்து வெட்கப்பட வேண்டும். நாம் கடின உழைப்பையும் எளிய வாழ்வையும் சிறந்த குணங்களாக ஏற்றுக் கொண்டால் நமக்கு மன அமைதி கிட்டும். நம்முடைய சொந்தச் செலவினங்களைக் குறைப்பதன் மூலம் கூட்டுச் சமூக நலச் செலவுகளுக்கும் அரசின் நிதி திரட்டலுக்கும் நாம் உதவ வேண்டும். இதன் மூலம் நமது நாட்டை வலிமைமிக்க சோசலிச அரசாக விரைவில் மாற்றியமைக்க நாம் உதவ முடியும். அன்றாட வாழ்வின் சித்தாந்த அம்சத்தைப் பொறுத்தவரை, எல்லாவற்றுக்கும் மேலாக நாம் கம்யூனிச இலட்சியத்துக்கு அர்ப்பணித்துக் கொள்வதோடு, மக்கள் நலன் மீதும் எதிர்கால உலகின் மீதும் அக்கறை செலுத்த வேண்டும். இந்த வழியில் நாம் ஒரு உறுதியான பொறுப்புணர் வையும், உயர்ந்த ஒழுக்க நெறிகளையும் வளர்க்க வேண்டும்.

இயல்பாகவே இதன் பொருள், நாம் நாள் முழுவதும் அரசியல் போராட்டங்களிலும் நமது வேலைகளிலும் மூழ்கிப் போக வேண்டும் என்பதல்ல. மனிதர்கள் என்ற முறையில் நமக்கு வாழ்வில் வண்ணமும் ஒளியும் நிறைந்த பல்சுவை மாற்றங்களும் பொழுது போக்குகளும் தேவையே. நமக்கு மனமகிழ்வும் ஓய்வும் அவசிய மானதுதான். எனவே நமக்கு கலையும் பொழுதுபோக்குகளும் தேவை. ஆனால் அவை மக்களின் சிந்தனையைத் தூண்டுவன வாகவும் கலாச்சார, ஒழுக்க மட்டங்களை உயர்த்துவதாகவும் இருக்க வேண்டும். நமது கலையும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும் போதனை அளிப்பதாக அமைய வேண்டும். எனவே நம்மிடமுள்ள கலைஞர்களும் கலைக் குழுக்களும் கற்பிக்கும் நோக்கத்துடன் செயல்படவேண்டும். நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ வர்க்கங் களின் வக்கிரமான, சீரழிந்த சுவை கொண்ட கலை இலக்கியங் களையும், கொடுமையையும் கோரத்தையும்சித்தரித்து பிற்போக்குத்

தனத்தைப் புகழ்பாடும் படைப்புகளையும், வாழ்வின் ஒழுக்கக் கேடான வகைகளைக் காட்டும் இலக்கியங்களையும் நாம் வெறுத்தொதுக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் அதிகார வர்க்க அணுகுமுறையோடு அவற்றைச் சகித்துக் கொண்டிருக்க அனுமதிக்கக் கூடாது. ஏனெனில் அவை நம் மீதும் குறிப்பாக, இளந்தலைமுறையினரின் ஆரோக்கியமான வளர்ச்சியிலும், தீய விளைவுகளையே ஏற்படுத்தும். முதலாளித்துவ நாடுகளில் நிலவும் குறிப்பிட்ட சில கலை - இலக்கியச் சிந்தனைப் போக்குகள் சீரழிவுத்தனமானவை என்பதை நாம் எச்சரிக்கையுடன் உணர வேண்டும். இந்தக் கலாச்சாரக் கழிவுக் குப்பைக் கூளங்கள் நமது அணிகளையும் இளந்தலைமுறையினரையும் சீரழித்து விடாமல் காக்க வேண்டியது நமது கடமையாகும். நாம் இத்துறையில் பல விடயங்களை முறைப்படுத்த வேண்டியுள்ளது. அண்மையில் நடந்த அனைத்து சீன கலை - இலக்கிய வட்டங்களின் சம்மேளன மாநாட்டில் நான் இந்த விடயம் குறித்து பேசினேன்; நமது எழுத்தாளர்களும் கலைஞர்களும் மறுசீரமையவும், தமது சித்தாந்த மறுவார்ப்புக்கு கூடுதல் முயற்சி எடுக்க வேண்டிய அவசியம் பற்றியும் விளக்கினேன்.

ஒரு தனிநபர் இவ்வைந்து அரங்குகளிலும் ஒரே நேரத்தில் தேர்வை எதிர்கொள்வது எளிதான செயல் அல்ல. அது நீண்ட காலத்தை எடுத்துக் கொள்ளும். இருப்பினும், முன்னணி ஊழியர்களாகிய நாம் இவ்வைந்து அரங்குகளிலும் ஒவ்வொரு சோதனையையும் எதிர்கொண்டு நிற்க உணர்வுபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்; நம்மைக் கடினமான சோதனைகளுக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும்.

★

*(மத்தியக் கமிட்டிக்கும் அரசு நிர்வாகக் குழுவுக்கும் நேரடியாகக் கீழே இயங்கும் துறைகளைச் சேர்ந்த முன்னணி ஊழியர்களின் கூட்டத்தில் தோழர் சௌ என்-லாய் ஆற்றிய உரையிலிருந்து சாரமாக எடுக்கப்பட்டது).*

## குறிப்புகள்

1. மே, 1963-இல் கட்சியால் ஏற்கப்பட்ட தோழர் மாவோவின் "நமது அண்மைக் கால கிராமப்புற வேலைகளில் சில பிரச்சினைகளின் மீதான சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் முடிவுகள் (10 அம்ச முடிவுகள்)" என்ற அறிக்கையிலிருந்து ஒரு பகுதி இங்கே குறிப்பிடப்படுகிறது. 1965-இல் இது "சரியான கருத்துக்கள் எங்கிருந்து வருகின்றன?" என்ற தலைப்பிலான கட்டுரையாக மாவோவின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

2. ஜார்ஜ் மார்ஷல் (1880-1959), இரண்டாம் உலகப் போரில் அமெரிக்க இராணுவத்தின் தலைமை அதிகாரியாவார். 1945-இல் அமெரிக்க அதிபர் ட்ருமனால் சீனாவுக்கான சிறப்புத் தூதராக நியமிக்கப்பட்டார். 1946 ஜனவரியில் கோமிண்டாங் தரப்பின் பிரதிநிதியாக ஜாங் ஹுன், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தரப்பின் பிரதிநிதியாக தோழர் சௌஎன்-லாய் ஆகியோரும் நடுவராக மார்ஷலும் கொண்ட "மூவர் குழு" அமைக்கப்பட்டு சமரசப் பேச்சுவார்த்தை நடந்தது. ஆனால், இதில் கோமிண்டாங் தரப்பை ஆதரித்து, அது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக மார்ஷல் பெருமுயற்சி செய்தார். ஆகஸ்டு 1946-இல் இந்த நடுவர் நடவடிக்கை தோல்வியடைந்து விட்டதாகப் பிரகடனப்படுத்திய மார்ஷல், விரைவிலேயே சீனாவை விட்டு வெளியேறினார்.

3. லியாவோ லுயான், 1960-களில் சீன மக்கள் குடியரசின் விவசாய அமைச்சர்.

4. சென்டு ஷியு (1879-1942), மே-4 புதிய கலாச்சார இயக்கத்தின் முக்கிய தலைவர்களுள் ஒருவர். செப்டம்பர் 1915-இல் அவர் யூத் (இளைஞன்) என்ற பத்திரிகையின் ஆசிரியர். 1918-இல் லீ டாஷோ என்பவருடன் சேர்ந்து அவர் வீக்லி ரிவியூ (வாராந்திர மதிப்பாய்வு) என்ற பத்திரிகையைத் தொடங்கி நடத்தி, புதிய கலாச்சாரத்தைப் பரப்பினார். மே-4 இயக்கத்தைத் தொடர்ந்து, அவர் மார்க்சியத்தை ஏற்று அதைப் பிரச்சாரம் செய்தார். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய நிறுவனர்களில் அவரும் ஒருவரானார். முதல் ஆறாண்டுகளுக்குக் கட்சியின் முதன்மைத் தலைவராகவும் செயல்பட்டார். முதலாவது புரட்சிகர உள்நாட்டுப் போருக்குப் பிந்தைய காலத்தில் அவர் வலதுசாரி சரணாகதிவாதத்தை முன்வைத்து பாரதூரமான தவறுகளை இழைத்தார். அதன் பிறகு புரட்சியின் எதிர்காலத்தின் மீதே நம்பிக்கை இழந்து ட்ராஸ்கிய கருத்துக்களை ஏற்றுக் கொண்டார். கட்சிக்குள்ளேயே ஒரு தனிக்குழுவைக் கட்டிக் கொண்டு கட்சிவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அதைத் தொடர்ந்து 1929-இல் அவர் கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டார்.

பின்னர் அவர் ஒரு ட்ராட்ஸ்கிய அமைப்பில் ஊக்கமாகச் செயல்பட்டார். அக்டோபர் 1932-இல் கோமிண்டாங்கால் கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்ட அவர் ஆகஸ்டு 1937-இல் விடுதலையானார். 1942-இல் அவர் நோய்வாய்ப்பட்டு மரணமடைந்தார்.

5. வாங்மிங் (1904-74) சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் 1925-இல் சேர்ந்தார். பின்னர் அவர் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினராகவும், அரசியல் தலைமைக் குழு உறுப்பினராகவும், மத்தியக் கமிட்டியின் சாங்ஜியாங் குழுவின் செயலாள ராகவும் சேவை செய்தார். 1931-க்கும் 1935-க்கும் இடைப்பட்ட காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியில் செல்வாக்கு பெற்றிருந்த இடது சாகசவாதத் தவறுகளின் தலைமைத் தளபதியாகத் திகழ்ந்தார். பிடிவாதமாக கட்சியின் விமர்சனத்தை ஏற்க மறுத்துவந்த அவர், சீனப் புரட்சியின் துரோகியாகச் சீரழிந்து போனார்.

6. காவோ காங் (1905-54), சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினராக பல்வேறு காலங்களில் சேவை செய்தவர். மத்தியக் கமிட்டியின் வடகிழக்கு பகுதிக் குழுவின் செயலாளராகவும், மத்திய மக்கள் அரசாங்கத்தின் துணைத் தலைவராகவும் செயல்பட்டவர். 1953-இல் அரசின் திட்டக் கமிஷனின் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார். அதிலிருந்து அவர் கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டார். 1954-இல் இது கண்டறியப்பட்டு கட்சியின் தேசிய மாநாட்டுத் தீர்மானத்தின் மூலம் அவர் கட்சியிலிருந்து வெளி யேற்றப்பட்டார்.

7. இக்கூட்டத்தில் தலைமை அமைச்சர், துணைத் தலைமை அமைச்சர்கள் மற்றும் அரசு நிர்வாகக் குழுவுக்கு நேரடியாகக் கீழுள்ள 73 அரசாங்கத் துறைகளின் முதன்மைத் தலைவர்களும் பங்கேற்றனர்.

# உண்மையைப் பேசுங்கள்;

## மெய்யான முயற்சிகளை மேற்கொள்ளுங்கள்; ஊக்கத்தோடு பணியாற்றுங்கள்; நடைமுறையில் விளைவுகளைச் சாதிக்கப் போராடுங்கள்.

பிப்ரவரி 3, 1962

சுயவிமர்சனம். செய்து கொள்வதன் நோக்கம், நமது ஐக்கியத்தை வலுப்படுத்துவதற்கேயாகும். எதார்த்தமான சான்றுகளிலிருந்து உண்மையைத் தேடும் அவசியம் பற்றி தலைவர் மாவோவின் வழிகாட்டுதல்களை நாம் கடைபிடிப்பது மிக முக்கியமாகும். வேறு வார்த்தைகளில் சொன்னால் - உண்மையைப் பேசுங்கள்; மெய்யான முயற்சிகளை மேற்கொள்ளுங்கள்; ஊக்கத்தோடு பணியாற்றுங்கள்; நடைமுறையில் விளைவுகளைச் சாதிக்கப் போராடுங்கள்.

கடந்த சில ஆண்டுகளாக நமது கட்சியின் நடத்தை வழியில் சில தவறான நடைமுறைகள் தலைதூக்கியுள்ளன. உதாரணமாக, பொய் சொல்வதும் அகம்பாவத்துடன் தற்பெருமை கொள்ளும் போக்கும் நிலவுகிறது.

மக்களை உண்மையைப் பேசுமாறு நாம் ஊக்கப்படுத்த வேண்டிய நேரமிது. நாம் இதை எப்படிச் செய்ய போகிறோம்? முதலாவதாக, தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் தமக்குக் கீழிருந்து வரும் கருத்துரைகளைக் காது கொடுத்துக் கேட்கத் தயாராக இருக்க வேண்டும்; பொய்யான கூற்றுக்களை எதிர்க்க வேண்டும்.

உயர்மட்டத் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் தமக்குக் கீழுள்ள துறைகளுக்கும் உள்ளூர் அமைப்புகளுக்கும் பெருங்சுமையான கடமைகளைத் திணிக்கின்றனர். இதனால் கீழ்மட்டப் பொறுப்பாளர்கள் இருவேறுபட்ட வேலை அறிக்கைகளைத் தயாரிக்கின்றனர். அதில் மேலதிகாரிகள் தமக்குச் சாதகமாக உள்ள எந்த அறிக்கைக்கு முன்னுரிமை தருவார்களோ அதைத் தேர்வு செய்து சமர்ப்பிக்கின்றனர். இதை இம்மாநாட்டில்

பங்கேற்றுள்ள சில தோழர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இவ்வகையிலான நடவடிக்கைகள், கட்சியின் வேலைப் பாணியில் உண்மையிலேயே மிகப்பெரிய பிரச்சினையாகும். பொய்யான அறிக்கை கொடுக்கும் பழக்கத்தை நமது தோழர்களில் பலர் வளர்த்துக் கொண்டால், தமது மேலதிகாரிகளுக்கு எது திருப்தியளிக்குமோ அதை மட்டுமே பேசினால், நமக்கும் முந்தைய பழைய சமுதாயத்தின் தரங்கெட்ட அதிகாரிகளுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? இம்மாநாட்டில் நீங்கள் விளக்கிய சில உள்ளூர் அமைப்புகளின் உண்மையான நிலைமையை அறிந்தபோது, நான் மிகவும் கலங்கினேன். பொய்யான அறிக்கைகளை நீங்கள் அனுப்புவது, நிச்சயமாக உங்கள் தவறாகும். ஆனால், மையப் பொறுப்பாளர்களாக உள்ள நாங்கள்தான் முதலில் குற்றம் சாட்டப்பட வேண்டியவர்கள். ஏனெனில், நாங்கள் உங்கள் மீது கூடுதலான வேலைச் சுமையை ஏற்றியுள்ளோம். இப்போதிலிருந்து கீழ்மட்டத் துறைகளின் மீதும் உள்ளூர் அமைப்புகளின் மீதும் சாத்தியமற்ற, பொருத்தமில்லாத கடமைகளைத் திணிப்பதை நிறுத்துவோம்; அவ்வமைப்புகளைக் குற்றம் சாட்டி முத்திரை குத்துவதை நிறுத்துவோம்.

மக்களை உண்மையைப் பேசுமாறு நாம் தூண்ட வேண்டும். அவர்கள் என்ன சொல்ல விரும்புகிறார்களோ - அது எவ்வளவு நீண்டதாகவும், சலிப்பூட்டுவதாகவும் இருந்தாலும் கூட நாம் பொறுமையாகக் கேட்க வேண்டும். டாங் வம்சத்தைச் சேர்ந்த லி ஷிமின் என்ற பேரரசர் அவரோடு முரண்படக்கூடிய வெய் ஜெங் என்ற அதிகாரியின் ஆலோசனைகளை அக்கறையுடன் கேட்டு வந்தார். "இரு தரப்பினது கருத்துக்களையும் கவனமாக கேள்! தவறான எண்ணங்களிலிருந்து விடுபட்டு நீ அறிவொளி பெறுவாய்!" என்று வெய் ஜெங் கூறிய ஆலோசனைப்படி பேரரசர் செயல்பட்டதால் அவர் தனது அரசை வலுவுள்ளதாக்கி, செழிப்பான நாடாகக் கட்டியமைப்பதில் வெற்றி பெற்றார். ஒரு நிலப்பிரபுத்துவ பேரரசரே தன்கீழுள்ள அதிகாரி கூறுவதை அக்கறையுடன் கேட்கும்போது, தோழர்களாகிய நாமனைவரும் உண்மையை அறிய கவனமாகக் கேட்பதற்கு கூடுதலான காரணங்கள் உள்ளன.

அடுத்தாக, மெய்யான முயற்சிகளை மேற்கொள்வது பற்றிய பிரச்சினைக்கு வருவோம். சில நேரங்களில் முழு ஆற்றலுடன் சிலர்

முயற்சி செய்வது போலத் தோன்றினாலும், அவை வெறும் பாசாங்குத்தனமாக உள்ளன. இங்கு நீங்கள் குறிப்பிட்ட இரு தொழிற்சாலைகளையே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வோம். அவற்றில் ஒன்று முடமாகி செயலற்றுக் கிடப்பதாகச் சித்தரிக்கப்பட்டது. ஆனால் உண்மையில் அந்த ஆலையின் தொழிலாளர்கள் தமது பணியில் கூடுதல் கவனம் செலுத்தி கடுமையாக உழைக்கவே செய்கிறார்கள். மற்றொரு தொழிற்சாலையோ, சறுசுறுப்போடும் முழுவேகத்தோடும் செயல்படும் நிறுவனமாகச் சித்தரிக்கப்பட்டது. ஆனால் அங்கே தொழிலாளர்கள் முழு ஆற்றலுடன் செயல்படுவதைப் போல பாசாங்கு செய்கின்றனர். இத்தகைய தவறான மதிப்பீடுகள் தலைவர் மாவோவின் வழிகாட்டுதலைக் கொச்சையாக வியாக்கியானம் செய்யும் செயலாகும். நாம் சாதிக்க வேண்டிய இலக்குகளை அடைய நமது ஆற்றலை முழுமையாக வெளிப்படுத்தி கூடுதல் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்காக புறநிலை சாத்தியபாடுகளுக்கு ஏற்ப, நம்மை அகநிலையாக பெருமுயற்சி செய்து தகவமைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. நாம் மெய்யான முயற்சிகளை வரவேற்கிறோம்; பாசாங்குகளை அல்ல. அனைத்து ஆற்றலையும் செலுத்தி நீங்கள் வேலை செய்வதாகச் சொன்னால், உங்களுடைய வேலை அறிக்கையையானது சான்றுகளிலிருந்து உண்மையை நிரூபித்துக் காட்டுவதாக இருக்க வேண்டும். ஆனால் சில விவகாரங்களில் இந்த முயற்சியானது போலித்தனமாக உள்ளது. சில நிறுவனங்களிலும் உள்ளூர் அமைப்புகளிலும் புத்தாண்டு தினத்திற்குக்கூட விடுமுறை அளிக்காமல், எல்லா நாட்களிலும் ஓய்வின்றிக் கடுமையாக வேலை செய்ய வேண்டுமென்று தலைமைப் பொறுப்பிலுள்ளவர்கள் தமக்குக் கீழே பணிபுரிபவர்களுக்கு உத்தரவிடுகின்றனர். இருப்பினும் மேலதிகாரிகள் சூழ்ந்து நின்று விரட்டும் போதுதான் அங்கே வேலை நடக்கிறது. அவர்கள் விலகிச் சென்றவுடனேயே தொழிலாளர்கள் ஓய்வெடுத்துக் கொள்வதும், புத்தாண்டு விழாவைக் கொண்டாட வீட்டுக்குச் செல்வதும்தான் வாடிக்கையாக உள்ளது.

நாம் ஊக்கத்தோடு பணியாற்ற வேண்டும். இதுவே நடைமுறையில் விளைவுகளைச் சாதிப்பதற்கான ஒரே வழியாகும். மாறாக, நிர்பந்தத்தின் மூலம் எந்த விளைவையும் சாதிக்க முடியாது.

அண்மைக் காலங்களில், "வெள்ளைக் கொடியைக் கிழிறக்குவோம்!" என்று முற்றிலும் பொருத்தமற்ற முழக்கங்களை மக்கள் தினசரி நாளேடு வெளியிட்டு வந்தது. இப்போது, இதற்காக அந்நாளேடு சுயவிமர்சனம் செய்து கொண்டுள்ளது. (1958-ஆம் ஆண்டின் மாபெரும் முன்நோக்கிய பாய்ச்சல் எனும் சோசலிசக் கட்டுமான இயக்கத்தின்போது, இடது தீவிரமாத கருத்துக்கள் செல்வாக்குப் பெற்று இருந்தது. தற்புகழ்ச்சியை எதிர்ப்பது, எதார்த்த சான்றுகளிலிருந்து உண்மையைத் தேடுவது ஆகிய அறிவு சார்ந்த கண்ணோட்டங்களை முதலாளித்துவ வகைப்பட்ட போதனைகள் என்றும், இவை வலதுசாரி - பழமைவாதக் கருத்துக்கள் என்றும், இவற்றைப் பின்பற்றுவோர் முதலாளித்துவ வெள்ளைக் கொடியினர் என்றும் முத்திரை குத்தப்பட்டது. இத்தகையோர் கடுமையாக விமர்சிக்கப்பட்டு, பழித்துரைக்கப்பட்டு தண்டிக்கப்-பட்டனர். இதுவே "வெள்ளைக் கொடியைக் கிழிறக்குவோம்!" என்ற முழக்கமாகக் குறிப்பிடப்பட்டது. இவ்வாறு தவறாகக் குற்றம் சாட்டி விமர்சித்துத் தண்டிக்கப்பட்டவர்கள் பற்றி மறுபரிசீலனை செய்யுமாறு ஏப்ரல் 1962-இல் மத்தியக் கமிட்டி ஒரு சுற்றறிக்கையை அனுப்பியது. அதைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்டவர்கள் தவறான குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை பெற்று இழந்த உரிமையை மீண்டும் பெற்றனர்.) தவறான, நிர்பந்தமான, பொருத்தமற்ற முழக்கங்களும் உத்தரவுகளும் எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதற்கு இது சான்றாகும்.

கடந்த சில ஆண்டுகளாக கூட்டங்களில் பங்கேற்றபோது நான் தனிப்பட்ட முறையில் பலருக்குத் தகுதிச் சான்றிதழ்களைப் பரிசளித்தேன். இங்கு யாராவது அப்படி பரிசு வாங்கி, இன்று அதற்கேற்ற தகுதியற்று இருந்தால், அச்சான்றிதழ்களைத் தூக்கி எறிந்து விடுமாறு கோருகிறேன். மக்களின் நல்வாழ்வுக்காக நாம் மெய்யான அர்ப்பணிப்போடு பணியாற்ற வேண்டும். நடைமுறையில் விளைவுகளைச் சாதிக்க வேண்டும். இதுதான் உண்மையான தகுதிக்கான சான்றிதழ் ஆகும்.

உண்மையைப் பேசுங்கள்; மெய்யான முயற்சிகளை மேற்கொள்ளுங்கள்; ஊக்கத்தோடு பணியாற்றுங்கள்; நடைமுறையில் விளைவுகளைச் சாதிக்கப் போராடுங்கள் - இவையனைத்தின் வடித்தெடுக்கப்பட்ட சாரம்தான், "எதார்த்தமான

சான்றுகளிலிருந்து உண்மையைத் தேடு!" என்ற முதுமொழியாகும். தோழர் மாசேதுங் இந்த முதுமொழிக்குப் புதிய வியாக்கியானத்தைக் கொடுத்தார். அவரது முதன்மையான சித்தாந்தக் கூறுகளில் ஒன்றாக இது எப்போதும் குறிப்பிடப்படுகிறது. இது மிகவும் செறிவுடைய, மிகவும் செழுமையான பொருள் பொதிந்த சொற்றொடராக விளங்குகிறது. இதை நடைமுறைப்படுத்த சிறந்த வழி எது? விரிவான விசாரணையையும் ஆய்வையும் - பரிசீலனையையும் படிப்பையும் மேற்கொள்வதே இதுற்கான முதற்தேவையாகும். சமூக ஆய்வு - விசாரணையை மேற்கொள்வது அவ்வளவு எளிதான செயல் அல்ல. ஏனெனில் தொடர்ந்த நான்கு ஆண்டுகளாக தற்பெருமையும் மிகை மதிப்பீடு செய்யும் போக்கும் நீடித்து வருகிறது. இதை ஒரேயடியில் மாற்றியமைப்பது சிரமமானது.

கடந்த ஆண்டு தோழர் லியு ஷாவோகி, ஹூனான் மாகாணத்தில் உள்ள தனது சொந்த ஊருக்குப் பயணம் மேற்கொண்டார் (இவர் பின்னர் முதலாளித்துவப் பாதையை ஆதரித்து கம்யூனிசத் துரோகியாகச் சீரழிந்தவர்). அங்கு அவர் தங்கியிருந்த ஆரம்ப நாட்களில், அவரைச் சந்தித்த மக்கள் உள்ளூர் நிலைமை பற்றி அவரிடம் துணிவாக எதையும் தெரிவிக்க முன்வரவில்லை. ஏனெனில், உண்மையான நிலவரத்தைத் தோழரிடம் தெரிவிக்காமல் அவர்கள் மூடிமறைக்க வேண்டுமென்றே சில அதிகாரிகள் விரும்பினார்கள். நானும் சமூக நிலைமைகளை ஆய்வு செய்வதற்காக ஒரு ஊருக்குச் சென்றேன். நான் அங்கு போவதற்கு முன்பாக, எனது அலுவலகத்திலிருந்து சில தோழர்களை அங்கு அனுப்பி வைத்தேன். ஆய்வுக்குப் பின்னர்தான் எங்களுக்குத் தரப்பட்ட தகவல்களும் புள்ளி விபரங்களும் உண்மையான நிலைமைக்கு மாறாக இருப்பதை நானும் என் தோழர்களும் கண்டறிந்தோம்.

உண்மையான நிலவரத்தை மக்கள் உங்களிடம் தெரிவிக்க வேண்டுமென்று விரும்பினால், நீங்கள் அவர்களை உங்களுக்குச் சமமாக மதித்து நடக்க வேண்டும். விடுதலைப் போர்க் காலங்களில் நாம் மக்களோடு நெருக்கமான உறவைக் கொண்டிருந்தோம். நாம் அவர்களோடு ஐக்கியப்பட்டு ஒன்றிணைந்து வாழ்ந்தோம். போர்க்கால சூழலிலிருந்து இன்று நிலைமைகள் மாறிவிட்டன. உதாரணமாக, உங்கள் கலந்துரையாடலில் நான் பங்கேற்க வந்தபோது நடந்ததையே எடுத்துக் கொள்வோம். அரங்கிற்குள்

நான் நுழைந்தவுடனேயே நீங்கள் அனைவரும் எழுந்து நின்று கைதட்டி என்னை வரவேற்றீர்கள். அது எனக்கு மிகுந்த சங்கடத்தைத் தந்தது. கைதட்டலை நிறுத்தச் சொல்வது உங்களைத் திகைப்படையச் செய்யுமோ என்று எண்ணினேன். ஆனால் நேற்று பிற்பகல் நான் இங்கு வந்தபோது, நீங்கள் கைதட்டாமல் இருந்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளித்தது. இத்தகைய கைதட்டும் சம்பிரதாயங்கள் உங்களையும் என்னையும் ஒருபோதும் நெருங்க விடாது. இது, நாம் ஒரே லட்சியத்திற்காகச் செயல்படும் சக தோழர்கள் என்பதை ஒருவகை தடையரண் ஏற்படுத்தி பிரித்து விடுகிறது. இந்தத் தடையானது கற்சுவரைப் போல் வலுவானதல்ல; மெல்லிய துண்டுக் காகிதத்தைப் போன்றது. இருந்த போதிலும் இந்தத் தடை நீடிக்கத்தான் செய்கிறது. நீங்கள் அனைவரும் 10, 20 ஆண்டுகளுக்கு முன்னரே புரட்சியில் சேர்ந்த மூத்த போராளிகள். அப்படியிருக்க நமக்குள் இத்தகைய வேறுபாடுகள் ஏன்? இன்று நாம் உயரதிகாரிகளாக மாறியிருக்கிறோம்; மிகப்பெரிய பரப்புடைய நாட்டை நமது கட்டுப்பாட்டில் வைத்து நிர்வகித்து வருகிறோம். ஆனால் நாம் புரட்சிகர தளப்பிரதேசங்களைக் கட்டியமைத்துப் போராடிய அன்றைய நாட்களின் நிலைமையோ வேறானது. அன்றைய நட்பும் ஐக்கியமும் இன்று நம்மிடையே இல்லாததைக் கண்டு நான் மிகவும் அஞ்சுகிறேன். இதைக் கருத்தில் கொள்ளும்போது, நீங்கள் என்னைக் கைதட்டி வரவேற்றது மிகவும் சங்கடமாக உள்ளது. இதுபோன்ற நடவடிக்கைகளிலிருந்து நம்மை மாற்றிக் கொள்வது அவசியமாகும். தொகுப்பாக கூறும்போது, வெற்றிகரமான சமூக ஆய்வு - விசாரணைகளை மேற்கொள்ள நாம் மக்களுடன் நெருக்கமான உறவைப் பேண வேண்டும்.

நம்முடைய ஜனநாயக மரபுகளை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதாவது கட்சி முழுவதும் இயல்பான, ஜனநாயக பாரம்பரியத்தை மீண்டும் நிலை நாட்டவும் மேம்படுத்தவும் வேண்டும். நமது இராணுவத்தில் ஜனநாயகம் மேலோங்கியிருந்த காரணத்தாலேயே, போர்க் காலங்களில் நாம் பல வெற்றிகளை ஈட்டினோம். நமது ஆயுதப் படையினர் போர்க்கள இயக்கங்களில் ஒப்பற்ற முறையில் போராடிக் கொண்டிருந்த போது, - விடுதலைப் போர் (1946-49) காலத்தில் - குறிப்பான உண்மையாக இது நிரூபணமானது. அந்த நேரத்தில் பெரும்படைப் பிரிவின் கீழுள்ள

ஆயுதக் குழுக்கள் கூட இராணுவச்செயல் தந்திரத் திட்டங்களை விவாதிக்கவும், போர் நடவடிக்கைகள் பற்றிய தமது கருத்துக்களைக் கூறவும் பெரிதும் ஊக்குவிக்கப்பட்டனர். கீழ் மட்டத்திலுள்ள இராணுவ வீரர்கள், இராணுவ விவகாரங்கள் குறித்து ஜனநாயக முறையில் விவாதிக்கும் நடைமுறையை தோழர் மாசேதுங் தொடங்கி வைத்தார். நமது அனைத்து இராணுவக் குழுக்களின் அனுபவங்களைத் தெரிவிப்பதற்கும் வழிகாட்டினார். இராணுவக் குழுக்களிலேயே ஜனநாயகத்தைப் பரந்துபட்ட அளவில் நடைமுறைப்படுத்தும்போது, ஏன் அதை கட்சி அமைப்புகளில் செயல்படுத்த முடியாது? கட்சியில் ஜனநாயகப் பாரம்பரியத்தை நிலைநாட்டி, கட்சி அமைப்பு விதிகளின்படி நாம் செயல்படுவதே சரியானதாகும்.

ஏழாவது தேசிய கட்சிப் பேராயத்தின்போது, தோழர் லியு ஷாவோகி கட்சி அமைப்பு விதிகளைத் திருத்தியமைப்பதற்கான அறிக்கையை முன்வைத்தார். தோழர் டெங்சியாவோபிங் இதேபோன்ற அறிக்கையை எட்டாவது தேசியப் பேராயத்தில் முன்வைத்தார் (இவர், பின்னர் லியு ஷாவோகியின் தலைமையில் முதலாளித்துவப் பாதையை ஆதரித்து கம்யூனிசத் துரோகியாகச் சீரழிந்தவர்). இவ்விரு அறிக்கைகளும் கட்சியின் ஜனநாயக வாழ்வு குறித்த பிரச்சினையின் மீது கவனம் செலுத்த வலியுறுத்தின. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக சில தோழர்கள் இந்தப் பிரச்சினையை அறவே புறக்கணித்து வந்துள்ளனர்.

சில நேரங்களில் மைய அரசுத் துறைகளிலிருந்து தவறான வழிகாட்டுதல்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதில் குறிப்பிடத்தக்க ஒரு விடயம் என்னவென்றால், தொலைபேசி உரையாடல்கள் மூலமாகவே விவாதங்களை நடத்தி முடிப்பதாகும். இந்த நடைமுறையானது, அப்படியே கீழ்மட்ட அமைப்புகளாலும் பின்பற்றப்படுகிறது. இது படிப்படியாக அடிமட்டம் வரை வேர் விடுகிறது. ஆனால் தொலைபேசி மூலம் ஜனநாயக ரீதியான விவாதங்களை ஒருபோதும் நடத்த சாத்தியமில்லை. இதனால், உயர் மட்டத்திலுள்ள பொறுப்பாளர்கள் கீழ்மட்ட அமைப்புகளுக்கு வெறுமனே உத்தரவுகளைத் திணிப்பதாகவே நிலைமை மாறிவிடுகிறது. நிச்சயமாக இது ஒரு தவறான நடைமுறையாகும்.

கட்சி அமைப்பு விதிகளைத் திருத்தியமைப்பது பற்றிய லியு ஷாவோகி, டெங்சியாவோபிங் ஆகிய தோழர்களின் அறிக்கைகள் உட்கட்சி ஜனநாயகத்தையே வலியுறுத்துகின்றன. நாம் நமது விருப்பப்படியோ நியாயமற்ற முறையிலோ தோழர்களையும் மக்களையும் தண்டிக்கலாமா? கூடாது! சரியான காரணங்கள் இல்லாமல் ஒருவரைக் கட்சியிலிருந்து வெளியேற்றுவதோ, அரசு அலுவலகங்களிலிருந்து வேலை நீக்கம் செய்வதோ, அல்லது கண்மூடித்தனமாகக் கைது செய்வதோ, அடித்துத் துன்புறுத்துவதோ ஒருபோதும் கூடாது. உட்கட்சி ஜனநாயகம் என்பது வேறு; சமுதாயத்தில் சட்ட ஒழுங்கு - ஜனநாயகம் என்பது வேறு. சமுதாயத்தில் நடக்கும் சட்டவிரோத நடவடிக்கைகளும் பொது ஒழுங்கைச் சிதைப்பதுமான விவகாரங்கள் உட்கட்சி ஜனநாயக எல்லைக்கு அப்பாற்பட்டவை. அவற்றை அரசு சட்ட விதிகளின்படியே கையாள வேண்டும்.

கட்சியில் ஜனநாயக நிகழ்வை மிக விரைவாக நிலைநாட்ட நாம் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கட்சியைக் கட்டுவது பற்றிய தோழர் மாசேதுங்கின் செறிவான கருத்துகளைப் பரவலாக விதைக்க வேண்டும். கைவிடப்பட்ட தாகத் தோற்றமளிக்கும் கட்சியின் உன்னதமான மரபுகளையும் மிகச்சிறந்த வேலைப் பாணியையும் நாம் மீண்டும் முழுமையாக நிலைநாட்ட வேண்டும். நமது கட்சியில் முறையான, தொடர்ச்சி யான ஜனநாயக நடவடிக்கைகள் இழைந்தோட வேண்டும். நாம் எதார்த்தமான சான்றுகளிலிருந்து உண்மையைத் தேடும் வகையில், கட்சியின் அமைப்பு விதிகள் கோரும் தகுதிக்கேற்ப செயல்பட வேண்டும்.

★

*(சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கட்சியின் மத்திய கமிட்டியால் ஏற்பாடு செய்யப்பட்ட, ப்யூஜியன் மாகாணத் தோழர்களைக் கொண்ட விவாதக் குழுவின் விரிவாக்கப்பட்டக் கூட்டத்தில் சுயவிமர்சனத்தின் பயன்பாடு என்ற தலைப்பில் நடந்த விவாதத்தில் தோழர் சௌ என்-லாய் ஆற்றிய உரையிலிருந்து சாரம்சமாகத் தொகுக்கப்பட்டது.)*

# எமது வெளியீடுகள்

- மார்க்சிய மூலநூல்களுக்கு வாசகர் வழிகாட்டி
  *- மாரிஸ் கார்ன்.:போர்த்* — ரூ. 35.00
- கம்யூனிசம் தோற்றதாம்! முதலாளித்துவம் வென்றதா? — ரூ. 6.00
- வதைக்கப்படும் மக்களும் புதைக்கப்படும் உரிமைகளும் — ரூ. 7.00
- வஞ்சக வலைவிரிக்கும் தன்னார்வக் குழுக்கள் — ரூ. 6.00
- மாசேதுங் மேற்கோள்கள் — ரூ. 50.00
- மார்க்ஸ் முதல் மாசேதுங் வரை
  *- ஜார்ஜ் தாம்சன்* — ரூ. 40.00
- மாவோவின் மூன்று சொற்பொழிவுகள் — ரூ. 8.00
- தொழிலாளி வர்க்கம் - கட்சி - இயல்பு பற்றி
  *- ஸ்டாலின், சென்யுன்* — ரூ. 15.00
- அதிகாரத்துவத்துக்கு எதிராகப் போராடுவோம்
  *- சௌ என்-லாய்* — ரூ. 3.00



**தோழர் சௌ என்-லாய்** தலைசிறந்த மார்க்சிய - லெனினியவாதியும் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளரும் சீனப் பொதுவுடமைக் கட்சியின், சீன மக்கள் குடியரசின் ஒப்பற்ற தலைவருமாவார். சீனாவின் புதிய ஜனநாயகப் புரட்சி, சோசலிசப் புரட்சி - சோசலிசக் கட்டுமானம் ஆகிய நீண்ட நெடும் புரட்சிப் பாதையில் கட்சியைக் கட்டுவது, மாற்று வர்க்க சித்தாந்தப் போக்குகளை முறியடித்து பாட்டாளி வர்க்கக் கட்சியை உறுதிப்படுத்துவது, செம்படையை நிறுவுவது, அரசியல் அதிகாரத்தை நிலைநாட்டுவது, ஐக்கிய முன்னணி, தூது - அரசு தந்திரப் பணிகள், பொருளாதார - கலாச்சாரப் பணிகள் முதலான சீனப் புரட்சியின் அனைத்து நடைமுறைப் பிரச்சினைகளிலும் மார்க்சிய - லெனினியத்தின் அனைத்தும் தழுவிய உண்மையை அவர் வழுவாமல் செயல்படுத்தி வெற்றியைச் சாதித்தார். மாசேதுங் சிந்தனையின் உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும் மிகச் சிறந்த பங்காற்றியுள்ள அவரது செறிவான அனுபவங்களும் வழிகாட்டல்களும், இந்தியப் புரட்சிக்கும் புரட்சியைத் தலைமை தாங்கி வழி நடத்தும் பொதுவுடமைக் கட்சிக்கும் என்றும் ஒளி விளக்காய் திகழ்பவை. ●

கீழைக்காற்று